RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s1348

OPEN ACCESS

# புலவர்களை ஆற்றுப்படுத்தும் முறையும் விருந்தோம்பல் முறையும்

**அ. கனகா** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), (பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), பெரம்பலூர், தமிழ்நாடு, இந்தியா

# The Order of Organizing Poets and the Way of Hospitality

**A. Kanaha** [a, *]

[a] Department of Tamil, Dhanalakshmi Srinivasan College of Arts and Science for Women (Autonomous), (Affliated to Bharathidasan Univeristy), Perambalur-621212, Tamil Nadu, India

* Corresponding Author: kanahadurai117@gmail.com

Received: 21-06-2022
Revised: 10-09-2022
Accepted: 18-09-2022
Published: 28-11-2022

Check for updates

**ABSTRACT**

Hospitality was regarded as the prime duty of life. The Tamils of the day were clear-minded people who did not consider "Enemies or beloveds" to lead a life with hospitality but welcomed the guests warmly and helped them with a lot of help. The ancient Tamils revered hospitality as the greatest virtue. There are some other country folk stories about those who know where the treasure is and hide it without even telling their siblings. But look at the culture of these artists, who do not envy an artist who resembles him but loves him and tells him the way to go, where he can go and get a rich prize. The highest quality of the character of people is the gift of giving away the wealth they have acquired to satisfy the hunger of others. The idea arises that they are superior to philanthropists. The western saying is that the best virtue is to teach the hungry how to make food rather than to give it to them. Hospitality has long been a social custom. From the king to the citizens, they are as hospitable as they can be. The citizens enjoyed welcoming the artists who went to see the king. It can also be seen that the king respected the artists at the highest level.

**Keywords:** Hospitality, Poets, King, People, Culture

## முன்னுரை

தமிழர்களின் வாழ்வில் மிக உயரிய பண்பாடுகளின் இன்றியமையாத ஒன்று விருந்தோம்பல். இத்தகைய பண்பாட்டினைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக நமமால் தமிழர்களின் வாழ்வில் மிக உயரிய பண்பாடுகளின் இன்றியமையாத ஒன்றுவிருந்தோம்பல். இத்தகைய பண்பாட்டினைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக நமமால் அறிய முடிகிறது. விருந்தோம்பலில் தமிழர்கள் தலை சிறந்தவர்கள். தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் இச்சிறந்த பண்பைக் காணலாம். தம்மை நாடிவரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உண்டி முதலியவைகளை அளித்து மிக்க அன்போடும், ஆர்வத்தோடும் அவர்களை உபசரிப்பதை இல்வாழ்வார்க்குரிய தலைசிறந்த பண்பாடாகப் பழந்தமிழகம் போற்றியது. இதனைத்தான் தொல்காப்பியம் விருந்து புறந்தருதல் என மனைக்குரிய மாண்புகளுள் ஒன்றாகக் கூறுகின்றது.

தன்னைநாடி வருவோர்க்கு, இல்லை என்று சொல்லாது கொடுக்கும் தலைவனது இல்லத்தில் உணவு சமைக்கும் விதத்தை,

“வரையாப் பெருஞ்சோற்று முரிவாய் முற்றம்

வேற்றுயாற்று அம்பியான் எற்றுஅற்று ஆகக்

ஐமயல் யானை அயாவுயிர்த் தன்ன

நெய்யுலை சொரிந்த மையூன் ஓசை”

எனும் இப்பாடலடியின் வாயிலாக அறியமுடிகிறது (Gurunathan, 2003). தலைவன் இல்லத்தில் ஆட்டிறைச்சியினை நெய்யில் சமைக்கும் முறையைக் கூறியுள்ளார். மேலும், இப்பாடலில் அவனது இல்லம் அமைந்துள்ள விதமும் கூறப்பட்டுள்ளது.

“இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு”

என்பது இல்லறவாழ்க்கையின் உயிர்துடிப்பாக விளங்குவது விருந்தோம்பலே என வள்ளுவர் கூறுகிறார் (Parimelalhagar, 1975).

கோவலன், கண்ணகியைப் பிரிந்து பல ஆண்டுகள் மாதவியுடன் சேர்ந்து இருந்தான். மாதவியிடம் இருந்து பிரிந்து மீண்டும் கோவலன் கண்ணகிடம் ஏகிய போது, கண்ணகி அழுகிறாள். பொன், போய் விட்டதே, பொருள் போய் விட்டதே, இளமை போய் விட்டதே என்று அழவில்லை. அத்தனை நாள் கோவலன் இல்லாமல் “விருந்தோம்பல் போய் விட்டதே! என்று அழுகிறாள்.

“அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை”

என்னும் பாடலடிகளின் வழியாக கண்ணகியின் அழுகைக்கான காரணத்தை அறியலாம் (Venkatasami nattar, 2017).

ஒரு ஆண் தனித்து இருந்தாலும், பெண் தனித்து இருந்தாலும் விருந்தினர் வரமாட்டார். ஆணும், பெண்ணும் சேர்ந்த இல்லறத்தாராக இருக்கும் போது மட்டுமே விருந்தினர் வருவர். இத்தகைய விருந்தினரைப் போற்றி வரவேற்று உபசரிப்பதே இல்லறத்தில் உள்ளவர்களின் தலையாய கடமை என்பதை தொல்காப்பியர்.

“கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்

மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்

விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோர் மாண்புகள்”

என்னும் நூற்பா வழி விளக்குகிறார் (Ilampooranar, 2001).

இல்வாழ்க்கையின் தலையாய கடமையாக விருந்தோம்பல் கருதப்பட்டது. இருந்தோம்பி இல்வாழ்க்கை நடத்துவது “இன்னார், இனியர்” எனக் கருதாமல் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று உதவிகள் பல செய்யும் தெளிந்த அறிவுடையவர்களாக அன்றைய தமிழர் விளங்கினர். பண்டைத் தமிழர்கள் விருந்தோம்பலை சிறந்த அறமாகப் போற்றினர்.

## ஆற்றுப்படை

பழங்காலத்தில் ஆற்றுப்படை என்பது ஒருவகை இலக்கியமாக வளர்க்கப்பட்டு வந்தது. அக்காலத்தில் இசைபாடும் கலைஞர் பலர் அந்தக் கலைகளை குடும்பச் செல்வங்களாக வழிவழியாகப் போற்றி வந்திருந்தனர். அந்தக் கலைகளையே தொழிலாகக் கொண்டு தனித்தனி இனங்களாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

பாணர், கூத்தர், பொருநர், விறலியர், ஆகியவர்கள் மன்னன் அல்லது வள்ளல் ஒருவனிடம் தாம் பெற்ற பரிசிலைத் தம்மை எதிர் நோக்கி வந்த இரவலர்க்கு எடுத்துக்கூறி, அவர்களும் அம்மன்னன் அல்லது வள்ளலிடம் சென்று பரிசில் பெற்று மகிழுமாறு வழிப்படுத்துவது தான் ஆற்றுப்படையாகும். பத்துப்பாட்டில் மட்டுமல்லாது புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றிலும் ஆற்றுப்படைகள் காணப்படுகின்றன.

## ஆற்றுப்படை காட்டும் விருந்தோம்பல் நிலைகள்

ஆற்றுப்படை நான்கிலும் அரசர் விருந்தோம்பல், மக்கள் விருந்தோம்பல் இடம் பெற்றுள்ளது. அரசர், தன்னை நாடி வந்த புலவர்களின் புகழுரையைக் கேட்கும் முன்பே உணவளித்து அவர் வறுமையை நீங்கச் செய்தான். அவர்களுக்கு வேண்டிய அளவு பரிசில் பொருள்களை வாரிவழங்குவான். அவ்வாறே நான்கு நில மக்களும் மன்னனை நாடி வரும் விருந்தினர்களுக்குத் தங்கள் இல்லத்தில் உள்ள நிலத்தில் விளைந்த உணவினைத் தந்து பாதுகாத்தனர்.

இல்லறத்திலே வாழ்வோர்க்குரிய கடமைகளில் “விருந்து புரத்தல்” என்பதைச் சிறந்த கடமையாக அறநூல்கள் குறிக்கின்றன. இந்த அறநூல்களின் முறையையே பண்டைத் தமிழர்கள் பின்பற்றி வந்தனர் என்று இக்காலத்தினர் நினைக்கின்றனர் உறவினர் என்று குறிப்பிடுவர். இந்த சிறந்த பண்புதான் தமிழர்களை அடிமையாக்கி விட்டனர் என்று கூறுவோரும் உண்டு. உதவி தேடி வந்தவர்களையே விருந்தினராக ஏற்றுக்கொண்டு உபசரித்து வந்தனர். ஒரு இனத்தவரின் சிறந்த பண்பாட்டை விளக்குவது அவர்களுடைய விருந்தோம்பும் குணமேயாகும்.

இவற்றை நற்றிணையில்,

“வரையாத் தாரம் வருவிருந்து அயரும்

தன் குடி வாழ்நர் அம்குடிச் சீறூர்.” (Kathir Mahadevan, 2012)

## அரசர் விருந்தோம்பல்

ஆற்றுப்படை நூல்களுள் அரசர் விருந்தோம்பல் என்ற நிலையில், கரிகாலன், நல்லியங்கோடன், இளந்திரையன், நன்னன், ஆகியோரைச் சுட்டமுடியும். கரிகாலன் விருந்தோம்பும் மாட்சியை பொருநராற்றுப்படையில் மூன்று நிலைகளில் காணமுடிகிறது. புத்தாடை உடுத்தல், கள்குடித்தல், ஆட்டிறைச்சி அளித்தல் ஆகிய மூன்று நிலைகளில் விருந்தோம்பி உள்ளனர்.

கரிகாலனின் விருந்தோம்பும் முறையைப்போன்றே நல்லியங்கோடனும் விருந்தோம்பியதை சிறுபாணாற்றுப்படையில் காணமுடிகிறது. ஆனால், சிறுபாணாற்றுப்படை பாடலில் புத்தாடை உடுத்தல், கள் உண்ணல் ஆகிய இரண்டு முறைகள் உள்ளன. இறைச்சி உண்ணல் குறிக்கப்படவில்லை என்கிறது.

## விருந்தினரைப் போற்றும் முறை

ஏலாதி பண்டையத் தமிழரின் விருந்தோம்பல் முறையைச் சிறப்பாகக் கூறுகிறது.

“இன்சொல், அளாவல், இடம், இனிது ஊண் யாவர்க்கும்

வன்சொல் களைந்து வகுப்பானேல் - மென்சொல்

முருந்து ஏய்க்கும் முட்போல் எயிற்றினாய்! நாலும்

விருந்து ஏற்போர் விண்ணோர் விரைந்து”

நம்மை நாடி வரும் விருந்தினரை மென்மையான சொல்லைக் கூறியும் உள்ளம் கலந்து உறவாடியும், தங்குவதற்கு வசதியான இடமளித்து, ஆடை அணிகலன்கள் முதலியவற்றையும் அளிக்க

வேண்டும். இவ்வாறு விருந்தினரை உபரிப்பவர்களைத் தேவர்கள் தம் விருந்தினராக ஏற்றுக்கொள்வார்கள் (Puliyur kesigan, 2004).

## மக்கள் விருந்தோம்பல்

வறுமையுற்ற கலைஞர்களைப் பொருள்பெற்ற கலைஞன், ஆற்றுப்படுத்தும் போது வழி கூறுவது மட்டுமின்றி, வழிநடைக் களைப்புத்தீர, இடைவழியுள்ள பல்வகை நிலத்திலும் வாழும் மக்களைப்பற்றியும் அவர்கள் விருந்தளிக்கும் உயர்பண்பு பற்றியும் கூறுவர். ஆற்றுப்படையில் நான்கு நில மக்களின் விருந்தோம்பலைக் காணமுடிகிறது. பொருநராற்றுப்படையில் முல்லை வழி இடம் பெற்றிருக்கிறது. அம்மக்களின் விருந்தோம்பல் இடம் பெறவில்லை. பெரும்பாணாற்றுப்படையில் முல்லை, மருதம். நெய்தல், பாலை நிலமக்கள் நல்கிய விருந்தோம்பல் இடம் பெற்றிருக்கிறது. இதே போன்று, சிறுபாணாற்றுப்படையிலும் மருதம், நெய்தல், பாலை நில மக்களின் விருந்தோம்பல் இடம் பெற்றிருக்கிறது. மலைபடுகடாமில் குறிஞ்சி, முல்லை, மருதம் மக்களின் விருந்தோம்பல் காணப்படுகிறது. இவ்வாறு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நிலமக்கள் தங்கள் இல்லங்களுக்கு வந்தவர்களுக்கு விருந்தளித்துப் போற்றி வந்துள்ளனர்.

சங்ககாலத் தமிழர்கள் வாழ்வில் எட்டுவகையான சுவைகளும் மேம்படுமாறு தங்கள் வாழ்க்கையை நடத்தியுள்ளனர். அவைகளும் பெருமிதம், வெகுளி, உவகை போன்ற சில சுவைகளுக்குத் தனித்த தலைமை இடம் கொடுத்தவர்கள். எனவே அவர்களுடைய வாழ்க்கை,

"காவிய நாயகர் மட்டும் வந்து

காதல் அறங்கள் வளர்க்கும்

தீவிய நன்னகர் ஈதோ இதைச்

செய்திட்ட சிற்பிகள் யாரே?"

என்ற நேயப்பட்டு வியக்கும்படியாக நடைபெற்றது (Manickavasagam, 2002).

## விருந்து இடும் முறை

பசியை அதிகரிக்கும் தவிர, பசியைத் தீர்க்காது, இதனை,

"ஒப்புடன் முகம் வரந்தே

உபசரித் துண்மைப் பேசி

காப்பிய பசியினோடு

கடும்பபடு ஆகுத் தானே"

என்னும் பாடலடி உணர்த்துகிறது (Padmanayam, 2008).

மேலும், ஒருவன் பரிமாறுகின்ற உணவானது புளித்துப் போன குழம்பு, தவிடு, கூழ், புழுக்கள் பற்றிய மாவு, அரைக்கீரையின் வேர், கெட்டியாய் இல்லாத தயிர், பக்குவம் தவறிய சருக்கரைப் பாகு, கிளறிய களி, நன்றாகத் தீட்டப்பட்ட சோறு உப்பு போடப்படாத நீராகரம் ஆகிய இவையே ஆயினும், இவ்வுணவானது அன்புடன் பரிமாறப்பட்ட உணவைச் சாப்பிட்டால் எவ்விடத்திலும் அது அருஞ்சுவை உடையதாய் இருக்கும். மாறாக பக்குவப்பட்ட தேன் பாகு, பசுநெய், பருப்புகள், முப்பழவர்க்கங்கள், பால் சாத வகைகள், தாளிக்கப்பட்ட கறி வகைகள் பலகார விதங்கள் போன்றவற்றுடன் சுண்டக் காய்ச்சப்பட்ட திரட்டுப் பால், சருக்கரைப் பொங்கல் முதலியவற்றுடன் உணவுப்படைத்தலும், அன்போடு இடப்படாத அந்த உணவால் திருப்தி உண்டாவதில்லை என்பதை,

"கெட்டசாறு தவிடு கஞ்சி கிருமி உண்ட மா அரைக்

கீரை வேர்தெளித்த மோர்முறிந்த பாகு கிண்டுமா
இட்ட சோறு கொழியல் உப்பிடாத புற்கை ஆயினும்
எங்கும் அன்பதாக நுங்க இன்பமாயி ருக்குமே
அட்டபாலகுழம்பு கன்னல்அமுதமோடு உதவினும்
அன்பனோ டளித்திடாத அசனம் என்ன அசனமே”
ஆற்றுப்படைகளில் விருந்தோம்பல்”

பண்டையக் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தங்களின் வறுமையின் காரணமாக வள்ளல்களை நாடிச்சென்றனர் (Padmanayam, 2008). சங்க இலக்கியங்களில் மட்டுமல்லாது ஆற்றுப்படைப்படைகளிலும் இச்செய்திகள் விரிவாகக் கூறப்படுகின்றன.

“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்”

என புறத்திணை நூற்பாவில் தொல்காப்பியர் சுட்டுகிறார் (Ilampooranar, 2001).

தன்மை நாடிவரும் விருந்தினருக்குத் தாம் உண்ணும் உணவு எதுவாயினும் அதனைக் கொடுத்து போற்றும் பண்பே தமிழர்பண்பாட்டில் சிறந்தது. ஆற்றுப்படை நூல்கள் ஐந்தினுள் ஆற்றுப்படை இலக்கியங்கள் கூத்தர், பாணர், பொருநர் முதலியினோரை வள்ளல்களிடம் ஆற்றுப்படுத்தியப் பாங்கினைக் கூறுகின்றன.

## திருமுருகாற்றுப்படை

முருகனின் அருளால் வீடுபேற்றினை அடைந்தவர் நக்கீரர். தான் பெற்ற அவ்வரிய அருள் இன்பத்தைதினை தன்னையொத்த சான்றோரும் பெற வேண்டும், பேரின்ப வாழ்வினை அடையவேண்டும் என்பது திருமுருகாற்றுப்படை ஆற்றுப்படையாகும்.

## பெரும்பாணாற்றுப்படை

இந்நூலில் உழவர்களின் விருந்தோம்பும் முறை கூறப்பட்டுள்ளது. வள்ளலை நாடிச் சென்று பெரும்பாணனுக்கும், சுற்றத்தினருக்கும், உழவர்கள் விருந்தோம்புகின்றன மற்றவரின் பசியைப் போக்குவர். அவர்கள் வறுமை அறியாதவர்கள். வயலில் விளைந்த வெண்ணெல்லால் உண்டாக்கிய சோற்றையும், மனையில் வளர்த்த கோழிக் கறியையும் உண்பிப்பர் என்று தொண்டைமான் இளந்திரையனின் நாட்டியில் வாழ்கின்ற உழவர்களின் வளமான வாழ்வையும், விருந்தோம்பும் திறத்தையும் பெரும்பாணாற்றுப்டை குறிப்பிடுகின்றது.

“தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை
மல்லல் பேர்ஊர் முடியின் மடியா
வினைஞர் தந்நத வெண்ணெல் வல்சி
மனைவாழ் அளகின் வாட்டொடும் பெருகுவிர்”

என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுகிறார் (Manickavasagam, 2002).

## மலைபடுகாடம் (கூத்தராற்றுப்படை)

பாணரை ஆற்றுப்படுத்தும் மலைபடுகாடம் குறிஞ்சி நிலத்தினுள் கிடைக்கும் தினை, வரகு, அவரை, எள், ஐவனவெண்ணெல், கரும்பு, தோரை, ஐயவி, இஞ்சி, கவலைக்கிழங்கு, வாழை, மூங்கில்நெல், தேமாங்கனி, நாவற்கனி, பாலக்கனி ஆகியவற்றையும் குறிஞ்சி நில மக்கள் வழிச் செல்வோருக்குக் கொடுத்துப் பேணுவர்.

இரவுநேரத்தில் அங்கு தங்குகின்றவர்களுக்குப் புலவுச் சோறு கிடைக்கும். பொன்னை நறுக்கிப் பொடித்தது போன்ற நுண்ணிய அரிசியில் வெள்ளாட்டை வெட்டி, அரிந்து அதன் தசையோடு சேர்த்து, நெய்விழுதைக் கூட்டிப் புலவுச்சோறு அமைத் விருந்தினருக்குக் கொடுப்பர். முரக்கட்டைகளை எரித்துக் குளிர் நீங்கச் செய்வர் என்று நன்னன் நாட்டில் திகழ்கின்ற அருவிகளையும், மலைகளையும் காக்கும் காவலர்களும், காடுகளைக் காக்கும் வேடர்களும் நன்னனைக் காணச் செல்லுகின்ற கலைஞர்களுக்கு நேரத்திற்கேற்ற முறையில் சிறப்பான உணவைக் கொடுத்து விருந்தோம்புகின்றனர்.

## சிறுபாணாற்றுப்படை

நெய்தல் நில மகளிர் தேறலும் மீனும், பாலை நில மகளிர் புளிங்கறிச் சோறும், ஆமான் சூட்டிறைச்சியும் மருதநில மகளிர் அமலை வெண்சோறும் பீர்க்கும் கலந்த உணவும் அளித்து விருந்தோம்புவர்.

ஆமூரில் உழவனின் தங்கையொருத்தி விருந்தோம்பும் திறன், அவள் தன் மக்களைக் கொண்டு கலைஞர்களைத் தடுத்து, வரவேற்று விருந்தளிப்பாள். பெண் யானையின் துதிக்கை போன்ற கருங்கூந்தல் அவள் முதுகுப்புறத்தில் தொங்கும். அவள் அரிசிச் சோற்றுடன் பிளவுபட்ட காலினையுடைய நண்டின் கலவையை அளிப்பர்.

"அவைப்பு மாண்அரிசி அமலை வெண்சோறு

கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்"

என்று நல்லூர் நத்தத்தனார் விருந்தளித்தமையைக் கூறியுள்ளார் (Mohan, 2004).

## பொருநராற்றுப்படை

காவிரி புரக்கும் நாடு கிழவோனாகிய சோழன்கரிகாலன், தன்னிடம் வரும் இரவலரைப் பருகுவது போல் ஆர்வமுடன் நோக்கி, இன்மொழி கூறினான்.

பசு தன் கன்றினைப் பரிவோடு நோக்குவது போலப் பொருநனைக் கரிகால் வளவன் வரவேற்பான் எனவும், அப்பார்வையானது கலைஞர்களிடம் இந்நாள் வரை நிலை பெற்று வந்த வறுமையை நீக்கும் என்றும் கூறப்படுகிறது. இரவலரின் மிகவும் நைந்து போன, பலமுறை தைக்கப்பட்ட அழுக்காடையை நீக்கி, மடையிடத்தே கொட்டைகள் முடியப்பட்ட தூய பட்டுடையைக் கொடுத்தான்.

"பாசிவேரின் மாசொடு குறைந்த

துன்னர் சிதாஅர் நீக்கி, தூய

கொட்டைக் கரைய பட்டுடை நல்கி"

என்று கரிகால் பெருவளத்தானின் சிறப்புக் கூறப்படுகிறது (Somasundranaar, 1966).

## முடிவுரை

இந்த ஆற்றுப்படை நூல்களில் முதல்வதாகச் சொல்லப்படும் திருமுருகாற்றுப்படை நூலில் மட்டும் விருந்தோம்பல் கூறப்படவில்லை. அடுத்ததாகக் கூறப்படும் பெரும்பாணாற்றுப்படையில்

உழவர்கள் விருந்தோம்பும் முறையும், மலைபடுகாடம்பில் பாணரை வழிபடுத்தும் விதமும் கூறப்படுகிறது. மற்ற அனைத்து நூல்களிலும் விருந்தோம்பலும் அதன் சிறப்புகள் கூறப்படுகின்றன. விருந்தோம்பல் சமுதாயப் பண்பாடாக இருந்துள்ளது. மன்னன் முதல் குடிமக்கள் வரை தங்களால் இயன்ற அளவிற்கு விருந்தோம்பியுள்ளனர். மன்னனைக் காணச்செல்லும் கலைஞர்களை வரவேற்பதில் குடிமக்கள் மகிழ்ந்தனர். மன்னன் மிக உயர்ந்த நிலையில் கலைஞர்களை மதித்துள்ளான் என்பதையும் உணரமுடிகிறது.

## References


Gurunathan, V. (2003) Puranaanooru Moolamum Uraiyum, Vadivel Pathippagam, Thanjavur, India.

Ilampooranar, (2001) Tholkappiyam Porulathikaram, Saratha Pathipagam, Chennai, India.

Kathir Mahadevan, (2012) Nattrinai, Koviliyur Madalayam, Koviliyur, India.

Manickavasagam, Gna. (2002) Patthupattu Moolamum Vilakka Uraiyudan, Uma Pathippagam, Chennai, India.

Mohan, R. (2004) Pathupattu, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

Padmanayam, (2008) Viveka Sinthamani, Karpagam Puthagaalayam, Chennai, India.

Parimelalhagar, (1975) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur kesigan, (2004) Purananuru, Paari Niliyam, Chennai, India.

Somasundranaar, P.V. (1966) Patinapalai (Kalitruyaanai Nirai), Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Venkatasami nattar, N.M. (2017) Silappathikaram , Ramaiya pathipagam , Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License